


**22. 01. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சி அமைக்கும் என்று பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. மக்கள் விரோத திமுக அரசிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் அவசியத்தை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சியமைக்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

5. ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் ஸ்ரீராம் பாலாஜி, நீல் இணை – ஆஸ்ட்ரேலிய பிரான்ஸ் இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

பிரதமர் வருகை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நாளை நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி உரையாற்றுகிறார்.

கூட்டம் நடைபெறும் பகுதிமுழுவதும் மத்திய பாதுகாப்பு படையினரின் கட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாக எமது செங்கல்பட்டு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 4 புதிய ரயில் சேவைகளை நாளை தொடங்கி வைக்கிறார்.

நாகர்கோவில் – மங்களூர் அம்ரித் பாரத் விரைவு ரயில் இதில் அடங்கும்.

தொடர்ந்து திருவனந்தபுரம் மாநகராட்சி மேம்பாடு வரைபட திட்டத்தை வெளியிடவுள்ளார்.

பிற்பகல் தமிழகம் வரும் பிரதமர் செங்கல்பட்டு மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

தமிழ்நாட்டில் வரும் ஏப்ரல் மாதம் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்று மூத்த பி.ஜே.பி. தலைவரும், மத்திய அமைச்சருமான
திரு. பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊழல் நிறைந்த மக்கள் விரோத திமுக அரசு வரும் சட்டப்பேரவை தேர்தலில் தோற்கடிக்கப்படும் என்றார்.

திமுக அரசு வளர்ச்சிக்கான எதையும் செய்யவில்லை என்பதை இளைஞர்கள், மகளிர், தொழிலாளர்கள்,

விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் உணர்ந்திருப்பதாக அவர் கூறினார்.

தேச நலனுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்த திரு. உதயநிதி ஸ்டாலினுக்கு உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளதாகவும், எனவே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் நாளைய மதுராந்தக பொதுக்கூட்டத்தை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக கூறியஅவர், தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்து கட்சியினரும் ஒருங்கிணைந்து வலிமையுடனம், ஒற்றுமையுடனும் இருப்பதாக குறிப்பிட்டார்.

வரும் ஏப்ரல் மாதம் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் போது தமிழகத்தில் நல்லாட்சியும், வளர்ச்சியும் ஏற்படும் என்றார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, மக்கள் விரோத அரசான திமுக-விற்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

திரு. உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்திற்கு எதிராக கருத்துக்களை தெரிவித்ததற்கு எதிராக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்திருப்பதாக குற்றம்சாட்டிய அவர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நாளை நடைபெறும் பொதுக்கூட்டம் தமிழகத்தில் அரசியல் சூழலை புரட்டிப்போடும் என்றார்.

முன்னதாக சென்னையில் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி இல்லத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ்கோயல், டாக்டர் எல்.முருகன், பி.ஜே.பி.

மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டடோரார் பங்கேற்றனர்.

திரு. பியூஷ்கோயல் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியில் இடம்பெற்றுள்ள தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. வாசன், புதிய நீதிக்கட்சி தலைவர் திரு. ஏ.சி. சண்முகம் ஆகியோருடனும் கலந்துரையாடிய பின்னர், காங்கிரஸ் கட்சியின் மீது நம்பிக்கை வைக்க மக்கள் தயாராக இல்லை என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>கே.ராம்மோகன் நாயுடு</u>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, உலகளாவிய பொருளாதார சக்தியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. கே.ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்

ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் வருடாந்திர உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் பேசியஅவர், நம்பகத்தன்மை, குறியீடு, படைப்பாற்றல் திறன் போன்றவற்றை ஒருங்கிணைத்து ஜனநாயக மதிப்பீடுகளுடன் நம்தேசம் வலுவடைந்து வருவதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் மின்னணு பொது கட்டமைப்பு சாதனை அளவாக வளர்ச்சி கண்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இந்நடவடிக்கை மற்றும் தரவு பங்கீடுகள் போன்றவற்றால் சாதகமான பொருளாதார சூழலை நமக்கு ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

<u>அனுப்பிரியா பட்டேல்</u>

வரி சீர்த்திருத்தங்கள், இலகுவான நெறிமுறைகள், எளிதான வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளால் ரசாயனம் மற்றும் பெட்ரோலிய ரசாயனத்துறை புதிய கட்டத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளதாக

இத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 14-வது பெட்ரோலிய ரசாயன கூட்டமைப்பு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றியஅவர், இந்தியாவின் உற்பத்தி பிரிவின் முதுகெலும்பாக இத்துறை திகழ்கிறது என்றார்

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் ரசாயன உற்பத்தியாளர்கள் பெரிதும் பயனடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் எரிசக்தி, தொழிலாளர் சீர்த்திருத்தங்கள், விஸ்தரிக்கப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் போன்றவை உற்பத்திக்கான செலவை குறைத்து, உலகளாவிய போட்டி சந்தைக்கு உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>ச.பே. – முதலமைச்சர்</u>

தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி அமையும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், அரசு ஊழியர்களின் 95 சதவிகித கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டுள்ளதாக கூறினார்.

அவர்களின் 23 ஆண்டு கால கோரிக்கையை திமுக அரசு நிறைவேற்றியதாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டை நோக்கி அதிக முதலீடுகள் கிடைக்கப் பெறுவதாகவும் முதலமைச்சர் கூறினார்.

தமிழக அரசின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒருலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், ஒருலட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ச.பே. – நேரு

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. K.N. நேரு தெரிவித்துள்ளார்.

பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது பேசிய அவர், ஊத்துக்கோட்டை பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

அரக்கோணம் நகராட்சியை தரம் உயர்த்துவது குறித்தும், நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ச.பே. – எ.வ.வேலு

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் ஆய்வு மாளிகை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பொதுப்பணி துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு கூறினார்.

❖❖❖❖❖❖❖

வெளிநடப்பு

தமிழக சட்டப்பேரவையிலிருந்து கேள்வி நேரத்திற்கு பின்னர் அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

தாங்கள் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை இன்றே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி இந்நடவடிக்கை.

பூஜ்ஜிய நேரத்தில் கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதிக்க வேண்டுமென்றால் முன்கூட்டியே அனுமதி பெறவேண்டுமென்று பேரவைத் தலைவர் திரு.அப்பாவு சுட்டிக்காட்டினார்.

அப்போது குறுக்கிட்ட முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அஇஅதிமுக கொடுத்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு நாளைய தினம் பேரவையில் பதிலளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து அஇஅதிமுகவினர் முழக்கமிட்டவாறே பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அப்போது பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கடந்த 10 ஆண்டுகளாக இருந்த நடைமுறை எதிர்கட்சியினருக்கு தெரியும் என்றும்,

பேரவை மரபுகளை மாற்றி திட்டமிட்டே அஇஅதிமுகவினர் குழப்பத்தை விளைவிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்பு, திட்ட வளர்ச்சி சார்பில் 285 அரை கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் இன்றுஅடிக்கல் நாட்டினார்.

மேலும் 76 கோடியே 88 லட்ச ரூபாய் மதிப்பில் முடிவடைந்த பணிகளையும் அவர் துவக்கி வைத்தார்.

மேலும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வுசெய்யப் பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

பதிவுத்துறையில் எளிய முறையில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வகையில் 18 சேவைகள் உள்ளடக்கிய செயல் திட்டத்தையும் அவர் துவக்கிவைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் வெளிநாட்டில் பட்ட மேற்படிப்பு பயில 10 பேருக்கு தலா 36 லட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகைக்கான ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காட்டில் 2 ஆயிரத்து 292 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

வேலூர் மாவட்டத்தில் வரும் திங்கட்கிழமை குடியரசு தினத்தன்று அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடைபெறும் என்று ஆட்சித் தலைவர் திருமதி. சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

திருச்சி, அரியலூர் மாவட்டங்களில் பொதுவிநியோகத்திட்ட குறைதீர் கூட்டம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

மின்னணு

ராணிப்பேட்டை மாவட்டத்தில் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்முறை விளக்கம் அளிக்கும் நிகழ்;ச்சி ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா முன்னிலையில் இன்று நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்முறை விளக்க மையத்தில் பொதுமக்கள் வாக்களித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

சாலை பாதுகாப்பு

சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு நாமக்கல், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் போக்குவரத்து காவல்துறை மூலம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழுப்புரம் மாவட்டத்தில் கல்லூரி பள்ளிகளுக்கு நேரடியாக சென்று மாணாக்கரிடையே இருசக்கர வாகனங்கள் ஒட்டுவதன் விதிமுறைகள் குறித்தும்,

தலைகவசத்தின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் 300-க்கும் மேற்பட்டோர் தலைக்கவசம் அணிந்து பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஆஸ்ட்ரியாவின் நீல் இணை – ஆஸ்ட்ரேலிய பிரான்ஸ் இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖